சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.120/2021</u>

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. சம்பத் | த/பெ: குப்புசாமி | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | முகவரி: | |
| தேதி: | 07.02.2025 | தாலுக்கா: | |

<u>குறுக்கு விசாரணை...</u>

தாவா சொத்தை என் தாயார் 19.07.1960 ல் கிரயம் வாங்கினாரா என்றால் ஆமாம். எனது தாயார் 10.08.2007 ல் இறந்துவிட்டார். தாவா சொத்திற்கான பட்டா 20.07.2021 ல் தான் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் இறந்து 14 வருடங்கள் கழித்துதான் எனது இறந்த தாயார் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா பெயர் மாற்றம் செய்ய 13.07.2021 ல்தான் மனு செய்தேன் என்றால் ஆமாம். எனது தாயார் கிரயம் பெற்று 61 வருடங்கள் கழித்து பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து கிரயம் பெற்றதிலிருந்து எனது தாயார் பெயரிலோ என் பெயரிலோ அனுபவத்தை காட்டும் ஆவணங்கள் உள்ளதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் படிக்க தெரியும். முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள் நான் சொன்னதா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள 9 ஆவணங்களில் தாவா சொத்து என் தாயார் அனுபவத்திலோ என் அனுபவத்திலோ உள்ளதை காட்டக்கூடியது இல்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரய அசல் ஆவணம் எங்குள்ளது என்று பிராதிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணம் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு உரிய ஆவணம் தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது தாயார் சொத்தை கிரயம் பெற்ற பின்னிட்டு 3 ஆம்

நபருக்கு கிரய ஒப்பந்தம் செய்து கொடுத்து சொத்தை கிரய ஆவணம் செய்துக்கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.